[28th March 1969

பேருந்து அடிச்சட்டங்கள்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு சர்க்கார் போக்குவரத்து இலாகாவுக்கு 1967 மார்ச்சு 6-ந் தேதி முதல் 15—3—1968 வரை பேருந்து சேஸிகள் யார் யாரிடமிருந்து என்ன விலைக்கு வாங்கப்பட்டது ?

(இ) 1966-ம் ஆண்டு எந்த விலைக்கு வாங்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) பம்பாயிலுள்ள திரு. டாடா என்ஜினியரிங்-லோகோமோடிவ் வணிக நிறுவனத்தினரிடமிருந்து 156 டாடா மெர்சிடெஸ் பென்ஸ் அடிச் சட்டங்கள் ரூ. 65,85,663 56 நிகர செலவில் வாங்கப்பட்டன. சென்னையிலுள்ள திரு. அசோக் லேலண்ட் நிறுவனத்தினரிடமிருந்து 305 லேலண்ட் காமெட் அடிச்சட்டங்கள் ரூ. 1,59,77,541·33 நிகர செலவில் வாங்கப்பட்டன.

(இ) 1966-ம் ஆண்டில் 233 லேலண்ட் காமெட் அடிச்சட்டங்கள் மட்டும் ரூ. 1,14,76,745·02 நிகர செலவில் வாங்கப்பட்டன.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : [கேள்வியில் யார் யாரிடமிருந்து என்ன விலைக்கு வாங்கப்பட்டது என்று தான் கேட்டிருக்கிறது. ஒரு பேருந்தின் விலை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : அடிச் சட்டத்திற்கு மட்டும் விலை கேட்டிருக்கிறது. அடிச் சட்டத்தின் விலையோடு அதைக் கட்டுவதற்கான செலவாக ரூ. 17,000 அளவுக்குக் கூட்டிப் பார்த்தால் மொத்தப் பேருந்தின் விலை கிடைக்குமென்று கருதுகிறேன்.

திரு. எஸ். ஜெயராம் ரெட்டியார் : தலைவர் அவர்களே, டாடா மெர்சிடெஸ் பென்ஸ் சேசுக்கும் அசோக் லேலண்ட் சேசுக்கும் என்ன விலை வித்தியாசமிருக்கிறது என்று சொல்லி விட்டால் பிரச்னை தீர்ந்துவிடுமென்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : விலையிலுள்ள வேற்றுமை பற்றிக் கேட்டார்கள். டாடா அடிச்சட்டம் ரூ. 42,000 ஆகிறது. லேலண்ட் காமெட் அடிச்சட்டம் ரூ. 9,000 அளவுக்கு அதிகமாகிறது. கட்டுவதற்கு இரண்டுக்கும் ஒரே செலவுதான்.

Tamil Nadu and Kerala State Transport Buses

* 294 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of Kerala State Buses for which permit was granted to operate in Tamil Nadu as on 1st July 1968 ;

(*b*) likewise, the number of buses of Tamil Nadu for which permit was granted to operate in Kerala State ; and

(*c*) the number of Tamil Nadu State buses allowed to operate in Kerala State to equate the Kerala State buses that are allowed to operate in Kanyakumari area ?

28th March 1969]

தமிழ்நாடு அரசு, கேரள அரசு பேருந்துகள்

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—7—1968 அன்றுள்ளவாறு எத்தனை கேரள அரசு பேருந்து களுக்கு (Buses) தமிழகத்தில் ஓட அனுமதி வழங்கப்பட்டுள்ளது ?

(இ) இதுபோன்று தமிழ்நாட்டைச் சேர்ந்த பேருந்துகள் (Buses) எத்தனை கேரள மாநிலத்திற்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது ?

(உ) கன்னியாகுமரி பகுதியில் கேரள அரசின் பேருந்துகள் எத்தனை ஓட அனுமதிக்கப்பட்டிருக்கிறதோ அதைப் போன்று தமிழக அரசு பேருந்துகள் எத்தனை கேரள மாநிலப் பகுதியில் ஓட அனுமதிக்கப்பட் டுள்ளன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) வழித்தடப் பேருந்துகள்	59
உற்றுழிப் பேருந்துகள்	2
(இ) வழித்தடப் பேருந்துகள்	43
உற்றுழிப் பேருந்துகள்	7
(உ) கேரள அரசு சாலைப் போக்குவரத்து கூட்டு நிறு வனப் பேருந்துகள்.	18
தமிழக அரசு போக்குவரத்துப் பேருந்துகள்	20

Madras Taxi Drivers' Representation

* 295 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the representations of Madras Taxi Drivers received by Hon. the Minister for Public Works in July 1968 ; and

(*b*) the action taken by the Government thereon ?

வாடகை வண்டி வலவர்கள் முறையீடு

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : (திரு என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1968 ஜூலையில் பொதுப் பணி அமைச்சரிடம் சென்னை டாக்ஸி டிரைவர்கள் கொடுத்த முறையீடுகள் யாவை ?

(இ) அரசு அதன் மேல் எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) சென்னை வாடகை வண்டி வலவர்கள் (Taxi drivers) சங்கம் கீழ்க்குறிப்பிட்டுள்ள தங்களது குறைகளை நீக்க வேண்டுமென முறையீடுகள் கொடுத் துள்ளனர்—

(1) குறிப்பிட்ட அளவுக்கு மேற்பட்ட வேகத்தில் ஓடுகிற மோட்டார் வண்டிகள் குறித்து காவல் துறை வழக்குப் பதிவு செய்யும் தற்போதைய முறையை ரத்து செய்தல்.

(2) வாடகை வண்டிகளை நிறுத்துவதற்குத் தேவையான இடங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.